2010 ஏப்ரல் 15]

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்தினுடைய பணிகள் குறித்து சட்டப் பேரவையில் அறிவித்தும் இன்னும் அந்தப் பணிகள் துவங்கப்படவில்லை. திரு. ஜெயபால் அண்ணன் அவர்களும், நாங்களும் சட்டமன்றக் குழுவின் ஆய்வுப் பயணத்தின்போது அங்கு சென்றிருந்தபோது இது குறித்து ஆய்வு செய்தோம். அங்கே அந்தப் பணிகள் எப்போது துவங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகப் பணி துவங்கி நடைபெற்றுக்கொண்டிருந்தது. இடையில் குளச்சல் மீனவ கிராம மக்களுக்கும், அந்த ஒப்பந்ததாரருக்கும் இடையிலே சில பிரச்சினைகள் ஏற்பட்டு, அது நடைமுறையில் உள்ள சாத்தியக்கூறுகளின்படி இல்லாமல், அதனை இன்னும் பெரிய அளவில் செய்ய வேண்டும் என்று அந்தப் பகுதி மீனவ மக்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். அந்த வகையில், அம்மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. சுரேஷ் ராஜன் அவர்களும், நானும் மற்றும் மீன்வளத் துறை அதிகாரிகளும், மீன்பிடித் துறைமுகம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் கலந்து ஆலோசித்திருக்கிறோம். விரைவில் அந்தத் துறைமுகப் பணி தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

50—

பட்டா

***61385—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி கிராமம், பாகல்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு மனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

[2010 ஏப்ரல் 15

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி கிராமம், பாகல்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு மனைப் பட்டா வழங்குவதற்காக ஓமலூர் வட்டாட்சியர்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி கிராமத்தில் உள்ள, பாகல்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 40 ஆண்டுகளுக்கு முன்பே துவங்கப்பட்டது. அது 2,500 உறுப்பினர்களைக்கொண்டு 30 கேன்கள் அளவிற்கு 1,200 லிட்டர் பாலை தினமும் கொள்முதல் செய்து வருகிறது. நேற்றையதினம்கூட இரவு 8-1/2 மணி வரை அங்கே பால் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கென்று 10 சென்ட் நிலப்பரப்பிலே பால் உற்பத்தியாளர்களே தங்கள் சொந்தப் பணத்தில் மூன்று இலட்ச ரூபாயில் தார்சு கட்டடத்தைக் கட்டியுள்ளார்கள். கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கப் பெயரிலே இதற்கு வீட்டு வரி கட்டப்பட்டு ரசீதும் இருந்திருக்கிறது. மேற்படி நிலம் கடந்த காலங்களில் கிராம நத்தம் புறம்போக்காகவும் இருந்திருக்கிறது. ஆனால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வளர்ச்சிக்காக இந்த நிலம் எடுக்கப்பட்டு எந்தவித வளர்ச்சியும் செய்யப்படாமல் அதன்பெயரிலேயே இருக்கின்ற காரணத்தினாலே, இது பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே பட்டா மாற்றம் செய்யப்படவில்லை. இதை வேணுகோபால் என்ற தனியார் சேகர் என்பவருக்கு விற்றிருக்கிறார். எனவே, பால் வளத் துறை இந்த நிலத்திற்கு பட்டா பெறாமல் இருந்தது ஏன்? எனவே, இதற்கு பால் வளத் துறை, கூட்டுறவுச் சங்கம் பெயரிலே பட்டா பெற்றுத் தருமா என்பதை மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி கிராமம்,

2010 ஏப்ரல் 15]

பாகல்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 1978-லிருந்து நடைபெற்று வருகிறது. இதில் 350 சங்க உறுப்பினர்கள் தினந்தோறும் 1,700 லிட்டர் பாலை சங்கத்திற்கு வழங்கி வருகிறார்கள். இந்த இடமானது சுமார் 15 சென்ட் நிலத்தில், புல எண் 282-ல் 4,945 சதுர அடியில் அமைந்திருக்கிறது. மேற்படி இடத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. இந்த இடம் தனக்குத்தான் சொந்தம் என்று பி.எஸ். வேணுகோபால் என்பவர் அவருடைய பவர் ஏஜென்ட் நெடுஞ்செழியன் எஙன்பவர் மூலமாக உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 242/05 என்ற வழக்கைத் தொடுத்திருந்தார். அந்த வழக்கு மேற்படி நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு, பால் வளத் துறையினுடைய அந்த சொசைட்டியின் வெங்கடாஜலம் என்ற செயலாளர் 12-7-2007 அன்று திரு. வேணுகோபால், திரு. நெடுஞ்செழியன், திரு. எஸ்.கே. சேகர் ஆகியோருக்கு எதிராக 65/07 என்ற எண்ணுள்ள வழக்கினைத் தொடுத்து ஒரு நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் பெற்றிருக்கிறார். தற்போது அந்த 4,945 சதுர அடி நிலத்திற்கு பட்டா பெறவேண்டும் என்று அந்தச் சங்கத்தினுடைய செயலாளர்மூலம் கேட்பு மனு செய்யப்பட்டது. அந்த மனுவின் மேல் விசாரணை செய்தபோது இதுபோன்ற வழக்குகள் நிலுவையில் இருந்த காரணத்தால் காலதாமதம் ஏற்பட்டு, இன்றைக்கு வீட்டு வசதி வாரியத்திற்கு அது சொந்தமான இடமாக இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் ஒப்புதலைப் பெற்று நில மாற்றம் செய்யப்பட்ட பிறகு, அரசு மூலமாகப் பட்டா வழங்கப்படும். இதுகுறித்து நேற்றையதினம் நானே தொலைபேசியிலே வட்டாட்சியரிடம் தொடர்புகொண்டு கேட்டேன். அவர் எனக்கு இதுகுறித்த நகலினை அனுப்பியிருக்கிறார். அந்த அடிப்படையிலே இதை ஆய்வு செய்தபிறகு நில மாற்றம் செய்து நிச்சயமாகப் பட்டா வழங்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பட்டா பெறுவதற்கான முயற்சியை மேற்கொண்டு பட்டா பெற்றுத் தருவோம் என்று சொன்னார்கள்.

இருந்தாலும், மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசும்போது, இது வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலம் என்று இங்கு சொல்லியிருக்கிறார்கள். அதற்கு முன்பாக இது கிராம நத்த நிலமாக இருந்திருக்கிறது. கிராம நத்த நிலம், அரசுக்குச் சொந்தமாக இருந்த நிலம், வீட்டு வசதி வாரியத்திடம் போய் இருக்கிறது. வீட்டு வசதி வாரியத்திடம் சென்ற பிறகு, அதன் பின்னர் தனியாருக்குக் கிரயமாகி இருக்கிறது. இப்போது தனியார் அந்த நிலத்தின்மீது ஸ்டே வாங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆக, இடையிலே நமது பால் வளத் துறையினர் தனியார், கோர்ட்டிலே ஸ்டே பெறுவதற்கு எப்படி விட்டார்கள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன். எனவே, மீண்டும் அதிலே தனிக் கவனம் செலுத்தி, அரசுக்குச் சொந்தமான நிலம் தனியாருக்குப் போகிறது. முன்பே அங்கே பால் வளத் துறையின் சங்க உறுப்பினர்களெல்லாம் சொந்தமாகக் கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்கள். அதற்குக்கூட நாம் அரசின்மூலமாகப் பட்டாவைப் பெற இயலாத நிலையில் இருக்கிறோம். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, இதிலுள்ள குறைகளையெல்லாம் நீக்கி, மீண்டும் பால் வளத் துறையின் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பட்டா பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளத் துறைக்கு எதிராகப் பிறர் யாரும் உறுத்துக் கட்டளை வாங்கவில்லை. பால் வளத் துறைதான் உறுத்துக் கட்டளைப் பரிகாரம் பெற்றிருக்கிறது. மற்றவர்கள் அத்துமீறி அந்த இடத்தில் நுழைந்துவிடக் கூடாது என்பதற்காக, மூவர்மீது நிரந்தர உறுத்துக் கட்டளையைக் கேட்டுப் பெற்றிருக்கிறோம். அதேநேரத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலத்தை வீட்டு வசதி வாரியத்திற்காக எடுத்துக்கொள்கிறார்கள். அவர்களின் தேவை போக, பாக்கி நிலத்தை அரசாங்கத்திடம் ஒப்படைக்கிறார்கள். ஆனால், கட்டடம் கட்டி இருக்கிற இடம் தற்போது வீட்டு வசதி வாரியத்திடம் இருப்பதாக கோட்டாட்சியர் என்னிடம் இன்றைக்குத் தகவல் தந்திருக்கிறார். ஆக, வீட்டு வசதி வாரியத்திடமிருந்து நிலத்தை அரசு பெற்று, அதன் பிறகுதான் பால் வளத் துறை கூட்டுறவுச் சங்கத்திற்கு, அரசுத் துறையின் மூலமாகப் பட்டா வழங்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.